மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Attack on Postal Staff by Tamil Nadu State Transport Department Workers.

* 328. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any complaint was made to the Police that the employees of the Tamil Nadu State Transport Department attacked the Postal Staff in October 1967 at Nagercoil?

(*b*) if so, the action taken thereon ; and

(*c*) whether the Transport staff of the Nagercoil branch pick up quarrel frequently with somebody or other ?

அரசு போக்குவரத்து துறை ஊழியர்கள் அஞ்சல் துறை ஊழியர்களை தாக்கிய நிகழ்ச்சி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நாகர்கோவிலில் 1967 அக்டோபர் மாதத்தில் அஞ்சல் துறை ஊழியர்களை தமிழக அரசு பேருந்து போக்குவரத்துத் துறை ஊழியர்கள் தாக்கியதாக போலீஸில் புகார் செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில் அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

(உ) நாகர்கோவில் பேருந்து போக்குவரத்து ஊழியர்கள் அடிக்கடி யாருடனாவது சண்டை போடுகின்றார்களா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) காவல் துறையினரால் தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை ஊழியர்கள் மூவர் நீதி மன்றத்தால் குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் செய்துகொண்ட மேல் முறையீட்டில் இரண்டு ஊழியர்கள் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். மூன்றாமவர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டதால் அவர் மீது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(உ) இல்லை.

Madurai Co-operative Central Bank

* 329. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there was any dispute in respect of the pay of the employees in the Central Co-operative Bank, Madurai?

(*b*) the basis of the scales of pay at present ?

(*c*) the nature of revision of pay scales as demanded by the employees ;

(*d*) the scales of pay of the employees in other Co-operative Banks in Tamil Nadu ; and

(*e*) whether the Government have intervened in this matter and given any advice?

[31st March 1969

மதுரை மம்திய கூட்டுறவு வங்கி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் சம்பளத் தகராறு ஏற்பட்டதா ?

(இ) எந்த அடிப்படையில் தற்போது சம்பள விகிதம் உள்ளது ?

(உ) சம்பள விகிதங்களை எப்படி திருத்தி அமைக்க வேண்டுமென ஊழியர்கள் கேட்கின்றனர் ?

(எ) தமிழகத்தில் மற்ற கூட்டுறவு வங்கிகளில் ஊழியர்களின் சம்பள விகிதங்கள் எப்படி உள்ளன ?

(ஐ) சர்க்கார் தலையிட்டு ஏதேனும் யோசனை கூறியதா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) and (உ) ஒரு விவர அறிக்கை [a] சட்டமன்றத்தின் முன் வைக்கப் பட்டுள்ளது.

(எ) கூட்டுறவு மத்திய வங்கிகள் அவைகளுடைய ஊழியர்களுக்கான சம்பள விகிதங்களை அவைகளின் நிதி நிலைமைக்கேற்ப நிர்ணயம் செய்திருக்கின்றன. அதனால் ஒரே மாதிரியான ஊழியர்களுக்கு நிர்ணயித்த சம்பள விகிதங்கள் ஒரு வங்கிக்கும் மற்றொரு வங்கிக்கும் வேறுபட்டு இருக்கும்.

(ஐ) இல்லை.

Lorry accidents near V.O.C. College, Tuticorin

* 330. Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of lorry accidents that took place opposite to V.O.C. College, Tuticorin in September and October 1968;

(*b*) whether it is correct that the formation of the road is the main reason for such accidents ; and

(*c*) if so, the action taken thereon ?

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி அருகே லாரி விபத்து.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி முன்பு 1968 செப்டம்பர், அக்டோபரில் எத்தனை லாரி விபத்துக்கள் நடந்தன ?

(இ) சாலையமைப்புதான் விபத்துக்குக் காரணம் என்பது சரியா?

(உ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :

(அ) 1968, செப்டம்பரில் லாரி விபத்து எதும் நிகழவில்லை. ஆனால் 1968 அக்டோபரில் மூன்று லாரி விபத்துக்கள் ஏற்பட்டன.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

---

[a] Printed as Appendix II on page 268.